[1973 நவம்பர் 22

Research on cultivation of radish

* 318 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Agricultural University has made any Research into the large scale production of radish in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) ஆம். குறைந்த காலத்தில் அதிக விளைச்சல் தரும் முள்ளங்கி பற்றிய ஆராய்ச்சி 1972-ம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்னும் நடைபெற்று வருகிறது. விதைகள் முப்பது நாட்களில் ஏறத்தாழ 5,000 கிலோ, ஐந்து டன் கிழங்கு தயாரிக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. கே. கந்தசாமி: கோவை விவசாயக் கல்லூரியில் உள்ள ரிசர்ச் ஸ்டேஷனில் முள்ளங்கி பற்றி பல விவரங்கள் தெரிந்துள்ளதாகச் சொல்கிறார்கள். சென்ற ஆண்டைவிட எல்லாப் பொருள்களின் விலைவாசியும் உயர்ந்திருக்கும்போது கரும்பின் விலை மட்டும் அதாவது கரும்பின் விலை மலிவாக இருப்பதாக விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். கரும்பில் உள்ள மொலாஸஸ்-ல் இருந்து விலை உயர்ந்த பொருள்களைக் கண்டு பிடித்திருப்பதாகக் கூறுகிறார்கள். இது விவசாயக் கல்லூரி ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்டதா? அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அதன் பலனைக்கொண்டு, கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய பலனைக் கொண்டு கரும்பின் விலை உயர உடனடியாக அரசு அதை ஏன் கைக்கொள்ளக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் சொன்னது ஒருவேளை அவர்களுக்குச் சரியாக கேட்காமல் இருந்திருக்கலாம். நான் கிழங்கைப் பற்றிச் சொன்னேன். அவர்கள் கரும்பைப் பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள். கரும்பின் விலை பற்றி அவர்கள் ஆவலாக இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பாகத் தெரிந்து கொண்டேன். அதுபற்றி இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விலையைச் சற்று உயர்த்துவதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.